# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 168/ந/2024, நாள் 27.10.2025

திரு. கோ. கோவிந்தராஜ்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மாங்காடு நகராட்சி, சென்னை–122. – எதிர்மனுதாரர்

சென்னை, அசோக் நகர், 15–வது தெரு, எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 11.09.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.09.2024 அன்று பெறப்பட்டு, 168/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, அசோக் நகர், 15–வது தெரு, எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு.கோ. கோவிந்தராஜ் தனது 11.09.2024 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட 17.12.2022 நாளிட்டு மாங்காடு நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“சர்வே எண்கள். Old No.136/6, Patta New S.No.569/13, New S.No.96/14, S.No.596/16, 596/17 மற்றும் 596/18 காஞ்சிபுரம் மாவட்ட மாங்காடு கிராமம் பள்ளிக்கூட தெரு என்ற முகவரியில் அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டி மார்க்கெட் பகுதிபோல், சுமார் தளம் ஒன்றுக்கு 10000 சதுரடியில் இரண்டு தளத்தில் வணிக வளாக கட்டிடங்கள் பார்க்கிங் வசதியில்லாமல் கட்டப்படுவதாகவும் இதனால் வரும் காலங்களில் அங்கு வரும் வாடிக்கையாளர் நடைபாதையில் வாகனங்களை நிறுத்தி போக்குவத்து நெரிசல் ஏற்படுத்துவார்கள். மேலும் கூட்டமாக ஓங்கி குரல் கொடுத்து பேச நேரிட்டு அருகில் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இடையூறு ஏற்படும் என்று அப்பகுதி மக்கள் மனுதாரரிடம் கூறியதால், கடந்த 20.10.2021 அன்று மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கட்டிட உரிமையாளர் முறையாக வணிக வளாகம் கட்ட வரைப்பட அனுமதி பெற்று கட்டுகிறார்களா என்று தெரிந்து கொள்ள RTI மனு மூலம் கட்டிடத்தின் வரைபடம் கேட்டு மனு அளிக்கப்பட்டது. அதன்படி 16.11.2022 அன்று ஆணையர் வரைபடங்கள் நகல் அளிக்கப்பட்டது. கட்டிட உரிமையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்ட வரைபடம் அனுமதி பெற்று சட்ட விரோதமான வணிகவளாக கட்டிடங்கள் கட்டப்பட்டது தெரியவந்தது. கடந்த 18.02.2022 அன்று நகராட்சி ஆணையர் அவர்களுக்கு சட்ட விரோத கட்டிடத்திற்கு NOC வழங்க கூடாது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டு ஒப்புகையுடன் அளிக்கப்பட்ட மனு பின்புறம் இணைப்பு. மேலும் 19.02.2021 அன்று தமிழ்நாடு மின்வாரியம் இயக்குநர், செயற்பொறியாளர், உதவி பொறியாளர் இவர்களுக்கு NOC

இல்லாமல் இவ்வணிகவளாக கட்டிடத்திற்கு இணைப்பு வழங்க கூடாது என்றும், ஒப்புகையுடன் மனு அளிக்கப்பட்டது. ஆகவே ஐயா அவர்கள் சட்ட விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட அக்கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த கோரி தற்காலிக மின்சார இணைப்பை துண்டித்து பதில் அளிக்க உத்தரவிடக்கோரியும் பொது நலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது."என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து மாங்காடு நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 30.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மாங்காடு நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.2518/2024/எப்–1, நாள்.16.10.2024–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.596/14, 138/6, 596/18,596/13, 596/17, 596/16, 596/15 பள்ளிக்கூட தெரு அமையும் இடத்தில் மாங்காடு பேரூராட்சியாக இருந்தபோது கீழ்கண்ட உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார்கள்.

1. M.S. பாக்கியலட்சுமி, M.S.வெங்கடேஷ் கட்டிட உரிம எண்.161/2021, நாள்.31.03.2021
2. M.S. ஏகவள்ளி, கட்டிட உரிம எண்.156/2021, நாள்.31.03.2021
3. M.S. வீரராகவ முதலியார், கட்டிட உரிம எண்.157/2021, நாள்.31.03.2021
4. M.S. சித்ரா, கட்டிட உரிம எண்.159/2021, நாள்.31.03.2021
5. M.V. ஜோதி கிருஷ்ணன், கட்டிட உரிம எண்.158/2021, நாள்.31.03.2021
6. M.S. அரங்கநாதன், கட்டிட உரிம எண்.160/2021, நாள்.31.03.2021

– என்பவர்கள் பெயரில் குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி மாங்காடு பேரூராட்சியாக இருந்த போது வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கான உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டிட அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக வணிக கட்டிடமாக கட்டி பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது.

மேற்படி கட்டிடத்தின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 205(1) (2)–ன் கீழ் நாள்.30.12.2022–ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அனுமதி பெற்ற உரிமையாளர்களால் இவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து எந்த ஒரு பதிலும் வழங்கப்படவில்லை. எனவே இந்நகராட்சியின் மூலம் இறுதி அறிவிப்பு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 205 (3)–ன் கீழ் நாள்.10.02.2023ல் அறிவிப்பு வழங்கப்பட்டது.

எனவே, இறுதி அறிவிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி இடத்தில் எந்த கட்டிட பணியும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இக்கட்டிடத்திற்கு நகராட்சி மூலம் எந்த ஒரு கட்டிட முடிவு சான்று (Completion Certificate) ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது". எனத்தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரையும் 06.02.2025–ல் இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 28.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் 06.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"எனது புகார் மனுவில் தெரிவித்துள்ள காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத்தெருவில், அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டிய இடத்தில் உள்ள கட்டிடம் குடியிருப்பு கட்டிடமாக இருந்தது. வீடு கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு ஊராட்சி, மற்றும் நகராட்சி அதிகாரிகளிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் 10,000 சதுர அடியில் விதிகளை மீறி வணிக வளாக பயன்பாட்டிற்கான கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இதனால் அந்தப்பகுதியில் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகிறது. அகவே ஐயா அவர்கள் போர்க்கால அடிப்படையில் மேற்படி கட்டிடத்தினை lock and seal செய்ய நடவடிக்கை எடுப்பதற்கும், மேற்படி கட்டிடத்தினை இடிப்பதற்கும் உத்திரவிடும்படி பணிவுடன் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்." எனத்தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்(பொ) ஆகியோர் 06.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துகொண்டு கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

- காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத்தெருவில், அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டிய இடத்தில் உள்ள குடியிருப்பின் உரிமையாளர்களால் குடியிருப்பு கட்டிட வரைபட அனுமதி பெற்று, அனுமதிக்கு மாறாக வணிக பயன்பாட்டு கட்டிடமாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920, பிரிவுகள் 205 (1) 2) –ன் கீழ் கட்டிட உரிமையாளர்களுக்கு 30.12.2022 அன்று நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், மேற்படி கட்டிடத்திற்கு இறுதி அறிவிப்பு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 205(3)–ன் கீழ் 10.02.2023 அன்று மீண்டும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.
- மேலும் இக்கட்டிடத்தின் மீது under section 56 (2-A) /57(4) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 –ன்படி (30 நாட்கள்) lock and seal அறிவிப்பு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.
- மேலும் 30 நாட்களுக்குள் கட்டிட உரிமையாளர்கள் தங்களது கட்டிடத்திற்கான அனுமதியினை வரன்முறைபடுத்த தவறும் பட்சத்தில் மூடி முத்திரையிடுதல் நடவடிக்கை மாங்காடு நகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்."எனத் தெரிவித்துள்ளார்.

7. மேலும் மாங்காடு நகராட்சி ஆணையரின் 27.01.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2518/2024/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"மாங்காடு நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட சர்வே எண்.596/14, 138/6, 596/18, 596/13, 596/17, 596/16, 596/15 பள்ளிக்கூட தெரு அமையும் இடத்தில் மாங்காடு பேரூராட்சியாக இருந்தபோது கீழ்கண்ட உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார்கள்.

1. M.S. பாக்கியலட்சுமி, M.S.வெங்கடேஷ், கட்டிட உரிம எண்.161/2021, நாள்.30.03.2021
2. M.S. ஏகவள்ளி , கட்டிட உரிம எண்.156/2021, நாள்.31.03.2021

3. M.S. வீரராகவ முதலியார், கட்டிட உரிம எண்.157/2021, நாள்.31.03.2021
4. M.S. சித்ரா, கட்டிட உரிம எண்.159/2021, நாள்.31.03.2021
5. M.V. ஜோதி கிருஷ்ணன், கட்டிட உரிம எண்.158/2021, நாள்.31.03.2021
6. M.S. அரங்கநாதன், கட்டிட உரிம எண்.160/2021, நாள்.31.03.2021

என்பவர்கள் பெயரில் குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி மாங்காடு பேரூராட்சியாக இருந்த போது வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கான உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டிட அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக வணிக கட்டிடமாக கட்டி பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது.

மேற்படி கட்டிடத்தின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 205 (1) (2)–ன் கீழ் நாள் 30.12.2022–ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அனுமதி பெற்ற உரிமையாளர்களால் இவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து எந்த ஒரு பதிலும் வழங்கப்படவில்லை. எனவே இந்நகராட்சியின் மூலம் இறுதி அறிவிப்பு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 205 (3)–ன் கீழ் நாள்.10.02.2023ல் அறிவிப்பு வழங்கப்பட்டது.

எனவே இறுதி அறிவிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி இடத்தில் எந்த கட்டிட பணியும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இக்கட்டிடத்திற்கு நகராட்சி மூலம் எந்த ஒரு கட்டிட முடிவு சான்று (Completion Certificate) ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும் தொடர் நடவடிக்கையாக section 56 (2-A) /57(4) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)–ன் படி LOCK AND SEAL (30 நாள்) அறிவிப்பு 20.01.2025 அன்று வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. இவ்விசாரணை தொடர்பாக மேலும் சில விவரங்கள் தேவைபடுவதால் இவ்வழக்கு தொடர்பான விசாரணை வருகின்ற 30.04.2025 அன்று நடைபெறும் என தெரிவித்து அதில் கலந்து கொள்ளுமாறு மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் கட்டட உரிமையாளர்களுக்கும் 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. 30.04.2025 அன்றைய விசாரணையில் மனுதாரர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத்தெருவில், அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டிய இடத்தில் உள்ள கட்டிடம் குடியிருப்பு கட்டிடமாக இருந்தது. வீடு கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு ஊராட்சி, மற்றும் நகராட்சி அதிகாரிகளிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் 10,000 சதுர அடியில் விதிகளை மீறி 300 கடைகள் கட்டி வணிக வளாக பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது. மேற்படி வணிக வளாக கட்டிடத்திற்கு இடது புறம் அரசு பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது.

இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, அந்தப்பகுதியில் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகிறது. பள்ளி செல்லும் மாணவ மாணவிகளுக்கு பல இடையூறுகள் ஏற்படுகிறது. எனவே ஐயா அவர்கள் மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க நடவடிக்கையும், lock and seal செய்ய நடவடிக்கை எடுப்பதற்கும், மேற்படி கட்டிடத்தினை அப்புறப்படுத்துவதற்கும் உத்தரவிடும்படி பணிவுடன் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

8. 30.04.2025 அன்றைய நேரடி விசாரணையில் மாங்காடு நகராட்சி ஆணையரின் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத்தெருவில் உள்ள கட்டிடத்தின் உரிமையாளர்கள் (1) M.S.பாக்கியலட்சுமி, M.S.வெங்கடேஷ், கட்டிட உரிம எண்.161/2021 நாள் 31.03.2021 (2) M.S. ஏகவள்ளி கட்டிட உரிம எண்.156/2021 நாள் 31.03.2021, (3) M.S. வீரராகவ முதலியார் கட்டிட உரிம எண்.157/2021 நாள் 31.03.2021, (4) M.S.சித்ரா கட்டிட உரிமஎண். 159/2021 நாள்31.03.2021, (5) M.S. ஜோதிகிருஷ்ணன் கட்டிட உரிம எண்.158/2021 நாள் 31.03.3021 மற்றும் (6) M.S. அரங்கநாதன் கட்டிட உரிம எண்.160/2021 நாள் 31.03.2021–ன் வழி கட்டிட வரைபட அனுமதி நகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

அனுமதிக்கு மாறாக வணிக பயன்பாட்டு கட்டிடமாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது மேற்படி நபர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920, பிரிவுகள் 205(1) (2) –ன் கீழ் நாள் 30.12.2022–ன் கீழ் கட்டிட உரிமையாளர்களுக்கு 30.12.2022 அன்று நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதனை தொடர்ந்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 205(3)–ன்கீழ் நாள் 10.02.2023 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக Tamil Nadu Town and Country Planning Act, 1971 (under section 56 (2-A) /57(4) –ன்படி நாள் 20.01.2025 அன்று பூட்டி முத்திரையிட 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு அறிவிப்பு மேற்படி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கட்டிடத்தினை பூட்டி முத்திரையிட ஏதுவாக மேற்படி கட்டிடத்தில் உள்ள பொருட்களை அகற்றிக்கொள்ள தெரிவித்து, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2518/2024/எப்1 நாள் 23.04.2025ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.'' என தெரிவித்துள்ளார்.

10. கட்டட உரிமையாளர்களின் சார்பாக அவர்களது வழக்கறிஞர் 30.04.2025 நாளிட்ட மின்னஞ்சலில், தற்போது கோடை காலமாக இருப்பதாலும், தங்களது கட்சிக்காரர்கள் மிகவும் வயதானவர்கள் என்பதாலும், அவர்களால் 30.04.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலையினை தெரிவித்து கோடை காலத்திற்கு பின்னர் ஒரு தேதிக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 30.04.2025–ல் நடைபெற்ற விசாரணையின் தொடர் விசாரணை 02.06.2025 அன்று நடைபெறும் என தெரிவித்து விசாரணைக்கான அழைப்பாணைகள் 23.05.2025–ல் அனுப்பப்பட்டன.

11. இந்நிலையில் மாங்காடு நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2518/2024/எப்1, நாள் 30.05.2025ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற நடுவர் அவர்களின் கடிதத்தில் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்.596/14, 138/6, 596/18, 596/13, 596/17, 596/16, 596/15 பள்ளிக்கூடத் தெருவில் முறைகேடாக கட்டியுள்ள வணிக வளாகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி பள்ளிக்கூட தெருவில் மாங்காடு பேரூராட்சியாக இருந்தபோது கீழ்கண்ட உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார்கள்.

1. M.S. பாக்கியலட்சுமி M.S.வெங்கடேஷ் கட்டிட உரிம எண்.161/2021, நாள்.30.03.2021
2. M.S. ஏகவள்ளி கட்டிட உரிம எண்.156/2021, நாள்.31.03.2021
3. M.S. வீரராகவ முதலியார் கட்டிட உரிம எண்.157/2021, நாள்.31.03.2021
4. M.S. சித்ரா, கட்டிட உரிம எண்.159/2021, நாள்.31.03.2021
5. M.V. ஜோதி கிருஷ்ணன் கட்டிட உரிம எண்.158/2021, நாள்.31.03.2021
6. M.S. அரங்கநாதன், கட்டிட உரிம எண்.160/2021, நாள்.31.03.2021

மேற்படி இடத்திற்கான உரிமையாளர்கள் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்று கட்டிட அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக வணிக கட்டிடமாக கட்டி பணிகள் முடிக்கப்படாமல் உள்ளது.

மேற்படி கட்டிடத்தின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 205 (1) (2), 205 (3)–ன் கீழ் 30.12.2022, 10.02.2023 ஆகிய தேதிகளில், ஒப்பளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டியுள்ள பகுதிகளை இடித்து வரைபடத்துக்கு ஒத்து வரும் படி மாற்றி அமைத்துக்கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அனுமதி பெற்ற உரிமையாளர்களால் இவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து எந்த ஒரு பதிலும் வழங்கப்படவில்லை. மேலும், இக்கட்டிடத்திற்கு நகராட்சி மூலம் எந்த ஒரு கட்டிட முடிவு சான்று (Completion Certificate) ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும் தொடர் நடவடிக்கையாக under section 56 (2-A) /57(4) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)–ன் படி LOCK AND SEAL (30 நாள்) அறிவிப்பு 20.01.2025 மற்றும் 23.04.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்டவாறு பல அறிவிப்புகள் தனியருக்கு வழங்கியும் எந்தவித விளக்கமும் பெறப்படாத நிலையில் மேற்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட வணிக கட்டிடம் 30.05.2025 பிற்பகல் 3.00 மணியளவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன்னிலையில், நகராட்சி பொறியாளர், நகரமைப்பு அய்வாளர், பொது சுகாதாரப்பணி பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் உதவியுடன் நகராட்சி பணியாளர்கள் மூலம் பூட்டி முத்திரையிடப்பட்டது என்ற விவரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது". என தெரிவித்துள்ளார்.

12. மனுதாரர் 02.06.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

" எனது புகார் மனுவில் தெரிவித்துள்ள காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத்தெருவில், அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டிய பகுதியில் உள்ள கட்டிடத்தில் 1000 அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள கடைகள் பகுதி அளவுதான் Lock and Seal நகராட்சியினர் செய்துள்ளனர். முழுவதுமாக Lock and Seal செய்து முடிக்கவில்லை.

எனவே மேற்படி கட்டிடத்தை முழுமையாக Lock and Seal செய்யுமாறு உரிய நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்திடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

13. மாங்காடு நகராட்சி ஆணையரின் சார்பில் நகராட்சி ஆணையர் (பொ) ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள பள்ளிக்கூட தெருவில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு தொடர் நடவடிக்கையாக Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), பிரிவு 56 (2A) மற்றும் 57(4) ன் கீழ் Lock and seal அறிவிப்புகள் வழங்கப்பட்டு, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட வணிக கட்டிடம் 30.05.2025 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் நகராட்சி பணியாளர்கள் மூலம் காவல் துறை ஒத்துழைப்புடன் முழுவதுமாக பூட்டி முத்திரையிடப்பட்டது. மேலும், அதற்குரிய புகைப்பட நகல்கள் மற்றும் பத்திரிக்கை செய்தி ஆகியவைகளை இத்துடன் இணைத்துள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

14. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலம், நகராட்சி ஆணையர்(பொ) வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும்

இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு கிராமம், பள்ளிக்கூடத் தெருவில் அரசு பள்ளிக்கூடத்தை ஒட்டிய மார்க்கெட் பகுதியில் சுமார் தளம் ஒன்றுக்கு 10000 சதுரடியில் இரண்டு தளங்கள் வணிக வளாக கட்டிடங்கள் பார்க்கிங் வசதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால், அங்கு நடைபாதையில் வரும் வாடிக்கையாளர்கள் நடைபாதையில் தங்களது வாகனங்களை நிறுத்தி போக்கு வரத்து நெரிசல் ஏற்படுத்துவார்கள் என தெரிவித்து, மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும்படி தனது புகார் மனுவிலும், அதனை தொடர்ந்து தனது வாக்குமூலத்தில் மேற்படி கடைகள் பகுதி அளவுதான் Lock and seal நகராட்சியினர் செய்துள்ளனர். முழுவதுமாக Lock and seal செய்து முடிக்கவில்லை என தெரிவித்து, மேற்படி, கட்டிடத்தை முழுமையாக Lock and seal செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்திட இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள பள்ளிக்கூடத் தெருவில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு தொடர் நடவடிக்கையாக Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), பிரிவு 56 (2A) மற்றும் 57 (4)–ன் கீழ் Lock and seal அறிவிப்புகள் வழங்கப்பட்டு, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட வணிக கட்டிடம் 30.05.2025 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் நகராட்சி பணியாளர்கள் மூலம் காவல்துறை ஒத்துழைப்புடன் முழுவதுமாக பூட்டி முத்திரையிடப்பட்டது என்பதை நகராட்சி ஆணையர்(பொ) வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

கட்டிடத்தின் உரிமையாளர்களுக்கு இரண்டு முறை விசாரணைக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும் விசாரணைக்கு ஆஜராகாதது கருத்தில் கொள்ளப்பட்டது.

15. இந்நிலையில் மனுதாரர் புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள மாங்காடு நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பள்ளிக்கூட தெருவில் அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாகவும், குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுவிட்டு, அனுமதிக்கு மாறாக வணிக கட்டிடமாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது மாங்காடு நகராட்சி ஆணையர் Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), பிரிவு 56(2A) மற்றும் 57(4)ன் கீழ் Lock and seal அறிவிப்புகள் வழங்கி மேற்படி கட்டிடத்தை 30.05.2025 அன்று பூட்டி முத்திரையிட்டுள்ளதைத் தொடர்ந்து அனுமதிமயற்ற/அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்த மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாங்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

16. 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 27–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கோ.கோவிந்தராஜ்,
த/பெ.திரு.கோபால்,
எண்.22/43, 15–வது தெரு,
அசோக் நகர், சென்னை – 600 083.
2) நகராட்சி ஆணையர்,
மாங்காடு நகராட்சி, மாங்காடு, சென்னை – 600122.

3) திருமதி.M.S.பாக்கியலட்சுமி,
திரு.M.வெங்கடேஷ்,
எண்.26, மணலி இல்லம்,
கஸ்தூரி ரங்கன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

4) திருமதி.M.ஏகவள்ளி,
எண்.26, மணலி இல்லம்,
கஸ்தூரி ரங்கன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

5) திரு.M.S.வீரராகவ முதலியார்,
எண்.26, மணலி இல்லம்,
கஸ்தூரி ரங்கன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600018.

6) திருமதி.M.S.சித்ரா,
எண்.26, மணலி இல்லம்,
கஸ்தூரி ரங்கன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

7) திரு.M.S.அரங்கநாதன்,
எண்.26, மணலி இல்லம்,
கஸ்தூரி ரங்கன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

8) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

9) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்பபடி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ☆ சென்னை–600 032 ☆

செயலாளர்